பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை 04.06.2023 கதிர் 206

## இது ரகசியம் அல்ல!

கடந்த ஒரு வாரமாக நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாா கைது விவகாரம் கடுமையான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒரு புறத்தில் கருத்துச் சுதந்திரம் குறித்தும் மற்றொரு புறத்தில் மத அபிமானம் குறித்துமாக இந்த வாதப் பிரதிவாத் செல்கிறது. நடாா தனது நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றில் பௌத்தத்தைப் பற்றித் தரக்குறைவாகப் பேசிவிட்டார் என்பதே குற்றச்சாட்டு. அது அவரது சுதந்திரம், அவருக்கு பௌத்த மதம் தொடர்பில் இருக்கக்கூடிய கருத்தை வெளிப்படுத்த எல்லா உரிமைகளும் இருக்கின்றன என்று ஒரு தரப்பினர் வாதிடுகின்றனர். கருத்துச் சுதந்திரம் ☞2

# தேர்தல் மீதல்ல ஆட்சி மீதே மக்கள் நம்பிக்கை இழப்பு

## ஜனாதிபதிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதிலடி

கொழும்பு, ஜூன் 04

தேர்தல்களை ஒத்திவைத்து ஆட்சியைத் தொடரலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகல் கனவு காண்கின்றார். மக்கள் தேர்தல்கள் மீதல்ல இந்த ஆட்சியின் மீதுதான் நம்பிக்கை இழந்ததுவிட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம் பெற்ற '2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி,

தற்போதும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் எனத் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலடி வழங்கும் வகையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்திருந்தார். ☞2



# யாழ். பல்கலை துணை வேந்தர் பதவிக்கு 4 பேர் போட்டி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம. பல்கலைக் கழகத்தின் அடுத்த துணை வேந்தர் பதவிக்காக நான்கு பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக் கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் நேற்று முன்தினம் - 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் ☞2

# முல்லையில் 120 ஏக்கர் காணியை யாழ். பல்கலை இழக்கும் அபாயம்

## மீன்பிடித்துறை வளாகம் அமைக்கவென வழங்கப்பட்டது

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடித்துறை அமைக்க வளாகம் அமைக்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிய காணி இதுவரை பயன்படுத்தப்படாததால் அதனை வவுனியா பல்கலைக் கழகத்திற்கு வழங்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிவரையும் காணியைப் பொறுப்பேற்க யாழ். பல்கலைக்கழகத்திற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பின்பிடித்துறையினையும் அதன் சார் பீடங்களையும் முல்லைத்தீவில் நிறுவ இடம் தருமாறு 2016ஆம் ஆண்டு அப்போது இருந்த யாழ். பல்கலைத் துணைவேந்தர் கோரியிருந்தார். அதே காலத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராக இருந்த நாகலிங்கம் வேதநாயகனின் ஒப்புதலுடன் பல்கலைக் கழகம் கோரிய நிலம் வட்டுவாகலில் 70 ஏக்கரும் சூரிபுரத்தில் 50 ஏக்கரும் வழங்கப்பட்டது.

அந்த நிலத்தைப் பயன்படுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த 7 வருடங்களில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. "நான் ☞2

# எந்த தேர்தலை எதிர்கொள்ளவும் பெரமுன எப்போதுமே தயார்தான்

## மகிந்த இப்படிச் சொல்கிறார்

எந்தத் தேர்தலையும் எந்தநேரத்திலும் எதிர்கொள்ள ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன தயாராகவுள்ளது என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

''இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50 வீத பலத்தைத் திரட்ட முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கச்சகலரும் ஒன்றுபடவேண்டியது அவசியம்'' ☞2



# பறிபோகின்றது கமலின் பதவி?

## பாதுகாப்பு அமைச்சில் அதிரடி மாற்றத்துக்கு ரணில் உத்தேசம்



பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக சாகல ரத்நாயக்கவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருகின்றார் என்று உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவின் இடத்துக்கே சாகல நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது. ☞2

# நடந்தது வாய்த் தர்க்கம் மட்டுமே தாகுதல்ல என்கிறது பொலிஸ்

பரீட்சை மண்டபம் அமைந்துள்ள பாடசாலைக்கு அருகில் அரசியல் தரப்பினர் ஒன்றுகூடியுள்ளனர் கிடைத்த தகவல்களை அடுத்தே பாதுகாப்புத் தரப்பினர் அங்கு சென்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரால் தாக்கப்பட்டமை மற்றும் துப்பாக்கி காட்டி அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:,

மருதங்கேணி பகுதியில் உள்ள பரீட்சை நடைபெறும் பாடசாலைக்கு அருகில் அரசியல் தரப்பினர் ஒன்றுகூடியுள்ளனர் என்று தகவல்கள் கிடைத்திருந்தன. இதனையடுத்தே அங்கு பாதுகாப்புப் பிரிவினர் சென்றிருந்தனர். அச்சமயத்தில் பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் மேலதிக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் தான் பாராளுமன்ற உறுப்பினருக்கும்,

# போதுமான எரிபொருள் கையிருப்பில்

நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நேற்றையதினமும் வரிசைகள் காணப்பட்ட நிலையில் அவர் விடுத்துள்ள விசேட அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெற்றோல் ஏற்றிய இரண்டு கப்பல்கள் நாட்டை அண்மித்துள்ளள. இந்த நிலையில், எரிபொருள் தட்டுப்பாடு குறித்து எந்த வகையிலும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இன்றும் (நேற்றும்) நாளையும் (இன்றும்) விடுமுறை ☞2

# இலங்கையில் 20 வீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிப்பு

இலங்கையில் மொத்த சனத்தொகையில் 19.4 சதவீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ள அதே வேளை 10 தொடக்கம் 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளில் 39 சதவீதம் பேர் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் களனிப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழு முன்னெடுத்த ஆய்வின் முடிவிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ☞2

## வங்கி அட்டையை திருடி

# 8 லட்சம் சுருட்டிய இளம்பெண் கைது

வெளிநாட்டில் இருந்து வந்த பெண்ணின் வங்கி அட்டையைத் திருடி தங்க ஆபரணம் வாங்கிய கிளிநொச்சி பெண் வவுனியாவில் கைது செய்யப்பட்டார். அவரைத் தாம் வியாழக்கிழமை கைது செய்தனர் என்றுவவுனியாபொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வசித்து வரும் பெண்ணொருவர் வவுனியா குருமன்காடு பிரதேசத்தில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

அப்போது அவரை சந்திக்க வந்த பெண் ஒருவர், அவரது வங்கி அட்டையைத் திருடிச் சென்றுள்ளார். அதனைப் பயன்படுத்தி 13 லட்சத்து 8 ஆயிரத்து 899 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் ☞2

# பொன் சிவகுமாரன் நினைவேந்தல் நாளை



ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தியாகியாகிய பொன் சிவகுமாரனின் நினைவேந்தல் நாளை கடைப்பிடிக்கப்படுகின்றது. இதில் அரசியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றி பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன் சிவகுமாரின் 49வது ஆண்டு நினைவேந்தல் நாளை இடம்பெறவுள்ளது. அது தொடர்பாக ஏற்பாட்டுக் குழு செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியது.

யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது சிலையடியில் நினைவேந்தல் இடம்பெறவுள்ளது.

பொன். சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் காவற்துறையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் அருந்தி 1974 ஜூ 5 வீரச்சாவடைந்தார்.

# உணவு விளம்பரங்கள் மீது கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

உணவுப் பொருள் விளம்பரங்கள் தொடர்பில் புதிய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை கடுமையாக்கியுள்ளனர்.

இது தொடாபில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உணவு பொருள்கள் தொடர்பில் 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் கொண்டுவரப்படவுள்ளன.

புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய உணவு பொருள்கள் தொடர்பான விளம்பரங்களை மூன்றாம் தரப்பினர் ஊடாக செய்யும்போது அதற்கு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

விளம்பரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உணவுச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அரச அச்சக திணைக்களத்தின் இணையத்தில் பதிவேற்றப் பட்டுள்ளது.

அடுத்த 6 மாதங்களில் இந்த புதிய ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் குறித்த ஒழுங்கு விதிகள் நடைமுறையிலும் கடுமையாக அவதானிக்கப் படவுள்ளன - என்றுள்ளது.

# 121 நிரப்பு நிலையங்கள் சிக்கலில் மாட்டும் அபாயம்

மே 27 ஆம் திகதிக்கும் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாட்களில் 121 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான எந்தவொரு முற்பதிவையும் மேற்கொள்ளவில்லையென எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

குறைந்தபட்ச எரிபொருள் கையிருப்பைபேணுவதற்கான முற்பதிவுகளை அநேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மேற்கொள்ளவில்லை என்பதையே ஆரம்பக்கட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிரப்பு நிலையங்களில் குறைந்தபட்சம் 50 சதவீதமான எரிபொருள் கையிருப்பு இருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

இந்த நிலையில், அனுமதிப்பத்திர விதி ☞2

# இன்று முதல் தடங்கலின்றி எரிபொருள்

பொது மக்கள் தமக்குத் தேவையான எரிபொருளை இன்று முதல் தடங்கல்கள் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்ள முடியும் என்று எரிபொருள் கொள்கலன் விநியோக உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் சாந்த டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் வேண்டுகோளுக்கு இணங்க பௌர்ணமி தினத்திலும் எரிபொருள் கொள்கலன்கள் விநியோகச் செயற்பாட்டில் கொள்கலன்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடந்த 31ஆம் திகதியன்று நள்ளிரவு எரிபொருட்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எரிபொருளின் விலை குறைக்கப்படுவதை முன்கூட்டி ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்பதற்காக மத உணர்வுகளைப் புண்படுத்தி மற்றவர்களைக்காயப்படுத்து-வதுற்கு எவருக்கும் உரிமை இல்லை என்று மற்றொரு தரப்பினர் வாதிடுகின்றனர்.

இந்த விவாதம் சமூக ஊடகங்களான பேஸ்புக், ட்டுவிற்றர், இன்ஸ்ரா போன்ற-வற்றில் சூடாக நடக்கின்றது. அதில் சுவாரஸியமான ஒரு உரையாடலைத்தான் இன்று உங்களுடன்பகிர்ந்துகொள்ளப் போகின்றேன். கருத்துச் சுதந்திரம் என்பது என்ன, அது அடுத்தவர் மனதைப் புண்படுத்தலாமா இல்லையா என்பதைஅவ்வளவுநாசூக்காக எடுத்துக் காட்டுகின்றது அந்த உரையாடல்.

நடாரா விவகாரம் தொடர்பில் பல அரசியல் தலைவர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர். அதில் முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளியான நவீன்திஸநாயக்கவும்ஒருவர். நடாரா செய்தது தவறு, என்ன இருந்தாலும் பௌத்தர்களின் மனம் புண்படும்படி அவர் அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கக்கூடாது என்ற சாரப்பட நவீன் ட்ருவிற்றரில் கருத்துப் பகிர்ந்திருந்தார். இத்தனைக்கும் தனது கருத்துக்களுக்காக நடாரா மன்னிப்புக் கேட்டிருந்தார். அதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டார், நவீனும் அவரைத் தாக்கியிருந்தார். நவீனின் கருத்துக்குப் பதிலளித்திருந்த மற்றொரு நகைச்சுவைக்கலைஞர் ரிக்கி கர்வியாஸ்சின்னஉத்திமூலம் நவீனை அம்பலப்படுத்திய இருப்பார். அந்தப் பதிவுடன் இந்த விவகாரம் சர்வதேச அளவிலும் புகழ்பெற்றது.

நவீனின் பதிவில் இப்படிக் கூறப்பட்டிருந்தது...

நவீன்: பேச்சுச் சுதந்திரம் என்பது, உங்கள் பேச்சு மூலமோ நடவடிக்கைகள் மூலமோ மற்றவர்களை இழிவுபடுத்தவோ, காயப்படுத்தவோ முடியும் என்று அர்த்தப் பட்டுவிடாது....!

ரிக்கி: உங்களுடைய கருத்து (ஐடியா) என் இதயத்தையே உருக்கிவிட்டது. அது என்னைக் காயப்படுத்தி விட்டது. அதனால் தயவு செய்து உங்கள் பதிவை நீக்கி விடுங்கள்.

நவீன்: உன் உணர்வுகளைக் காயப்படுத்தியமைக்கான மன்னித்துக்கொள் என் நண்பனே! ஆனால், என்னால் பதிவை நீக்க முடியாது. என் பதிவு என் கருத்தை வெளிப்படுத்தும் என் உரிமை.

ரிக்கி: ஹ...... ஹ....... ஹா.......... மாட்டிக்கொண்டீர்கள்.

ஆக மொத்தத்தில் அடுத்தவர் மனது புண்படுகின்றது என்பதற்காக எனது கருத்தைத் தெரிவிக்கும் உரிமையை யாரும் பறிக்க முடியாது என்பதுதான் நவீனின் கருத்து. அதைத்தான் நடாராவும் செய்தார். இதை இலாவகமாப் போட்டு வாங்கி நவீனை அம்பலப்படுத்தி விட்டார் ரிக்கி.

தனக்கு வந்தா இரத்தம் அடுத்தவனுக்கு வந்தா அது தக்காளிச் சட்னி என்பதுதான் இங்கு பலரின் அரசியல் நிலைப்பாடு. பாவம் அவர்கள்.

- இடிமின்னல் -

## தேர்தல் மீதல்ல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் மீதும், அரசியல் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்று ஜனாதிபதி பொய்யுரைக்கின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல் ஒன்றை நடத்தினால் மக்கள் ஆணை இந்த அரசுக்குக் கிடைக்காது என நூறு வீதம் தெரிந்த காரணத்தால்தான் ஜனாதிபதி இவ்வாறு பொய்யுரைக்கின்றார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

உண்மையில் தேர்தல் மீதும், அரசியல் மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. இந்த ஆட்சி மீதுதான் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அவர்கள் தேர்தல் ஒன்றை உடன் நடத்துமாறே கோரி நிற்கின்றார்கள் - என்றும் சஜித் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதிக்குத் துணிவு இருந்தால் தேர்தல் ஒன்றை நடத்தி தற்போதைய அரசுக்கான மக்கள் ஆணையைநிரூபித்துக் காட்டட்டும் என்றும் அவர் சவால் விடுத்தார்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐக்கிய மக்கள் சக்திதான் வெற்றிவாகை சூடும் என்றும் அக்கட்சியின் தலைவர் சஜித் அடித்துக் கூறினார்.

''நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் இந்த ஆட்சிக்கு எதிராக 50 சதவீத பலத்தைக்கூடத் திரட்ட முடியாது. எனவே தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கசகலரும்ஒன்றுபட வேண்டியது அவசியம்'' என்றும்நுவரெலியநிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

## யாழ். பல்கலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிற்பகல் 3:00 மணியுடன் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கமைய விண்ணப்ப காலம் நிறைவடைந்த வேளையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் மூவரும், கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரும்மென மொத்தம் நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தரும் பேராசிரியருமான சி.சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ.கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும்வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தில் இருந்து விண்ணப்பித்துள்ளனர். கிழக்குப் பல் கலைக் கழகத்தில் இருந்து விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபாவும் விண்ணப்பித்துள்ளார்.

## முல்லையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளராகப் பணியாற்றியபோதே அந்தக் காணியை பல்கலைக்கழகத்திற்கு வழங்கினேன். இன்று நான் மாவட்டத்தின் மேலதிக செயலாளராகப் (காணி) பணியாற்றுகின்றேன். ஆனால் அந்தக் காணிகள் பற்றைக் காடுகளாக அப்படியே கிடக்கின்றன. நாம் வழங்கிய 120 ஏக்கர் நிலத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படவில்லை.குறைந்த பட்சம்அப்பகுதியை சீர் செய்து மதிலோஅல்லதுவேலியிட்டோ பாதுகாக்கவோகூட பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அப் பகுதியை எம்மிடம் தாருங்கள் நாம் உடன் பணி செய்கின்றோம் என வவுனியா பல்கலைக்கழகம் கோரி நிற்கின்றது" என்கிறார் மாவட்ட மேலதிகச்செயலாளர் (காணி) குணபாலன்.

வவுனியா பல்கலைக் கழகம் காணியை கோருவதனை அறிந்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தாம் இந்தக் காணியைச் சட்டபூவமாகக் கையேற்க நடவடிக்கை எடுத்துள்ளோம் அத்தோடு அமைச்சரவைஅனுமதிக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம் எனக் கடிதம் எழுதினர். ஆனால்அதன்பின்னரும்எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதால் இந்த இரு இடங்களையும. வவுனியா பல்கலைக் கழகத்திடம் கையளித்துமுல்லைமாவட்டத்திற்கும் ஓர் பல்கலைக் கழக பீடத்தை உடன் கொண்டுவர முயற்சிக்கவேண்டும்எனவும் குணபாலன்ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இருப்பினும் இந்தக் காணியைப் பெறுவது தொடர்பில் யாழ். பல்கலைக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ள காரணத்தால், அவர்களுக்கு மேலும் அவகாசம் வழங்கும் வகையில் இந்த ஆண்டு இறுதி வரை யில் காத்திருக்கலாம் என் றும் அதன் பின்னரும் காணியைப்பொறுப்பேற்கஅவர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனைவவுனியாபல்கலைக் கழகத்திற்கு வழங்கலாம் என்றும் ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## எந்த தேர்தலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2023/2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றியபோதேஜனாதிபதி இதனைக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்சவிடம் வினவிய போது,

ஜனாதிபதியின் கருத்து அவரின் தனிப்பட்ட கருத்து. அவரின் கருத்துக்கு என்னால் பதில் வழங்க முடியாது. ஆனால், எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ள ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன தயாராகவுள்ளது. மக்கள் ஆணை மீண்டும் எமது கட்சிக்குக் கிடைக்கும். - என்றார். (02)

## பறிபோகின்றது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்புமேற்குதொகுதியின் புதிய அமைப்பாளராகவும் ஜனாதிபதி பணியாளர் குழாமின் பிரதானியாகவும் சாகல ரத்நாயக்க தற்போது செயற்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்று கருதப்படுவதால் அதற்கு முன்னதாக அரச நிர்வாக சேவையில் பல மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (02)

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆய்வு பற்றிய தகவல்களை ஜேர்மனியில் உள்ள சமூக மனநலம் மற்றும் மனநோய் தொற்றுநோ-யியல் பற்றிய இதழ் வெளிப்படுத்தியுள்ளதோடு மனநலப் பிரச்சினையின் ஆபத்தான நிலைமைக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆய்வுதொடர்பில்மேலும் தெரவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆய்வுக்குழுவானது 20 வருடகாலப்பகுதியில் 52,000 இலங்கையர்களிடம் 33 மதிப்பீடுகளைச் செய்துள்ளது.

அதனடிப்படையில், இலங்கை சனத்தொகையில் 19.4 சதவீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மன அழுத்த பாதிப்பானது குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக உள்ளது.

இதேவேளை, 2003 முதல் 2023 வரை முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் 52,778 நபர்கள் உள்ளீர்க்கப்பட்டதோடு, 10 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே மனச்சோர்வுஅதிகமாகஇருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டது.

இருப்பினும் இலங்கையில் ஏறக்குறைய 39 சதவீதமான இளையோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களில் 18.4 சதவீதம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தாய்வழி மக்கள் மற்றும் 25 முதல் 60 வயதுக்குட்பட்ட பெரியவர்கள் முறையே 16.9 சதவீதம் மற்றும் 8.7 சதவீதம் இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

## 121 நிரப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முறைகளைமீறும்எரிபொருள் நிரப்புநிலையங்களின் உரிமங்கள் ஆய்வுகளின் பின்னர் இரத்து செய்யப்படவுள்ளன என்றார்.

## நடந்தது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் நடைபெற்றுள்ளது என்றார்.

இதேவேளை, மருதங்கேணி பகுதியில் நடைபெற்ற அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் எவ்விதமான மு றைப்பாடுகளும் பதிவாகவில்லை என்று மருதங்கேணி பொலிஸ்நிலைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் கருத்துத் தொடர்பில் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:

நாங்கள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தியோ, அல்லது பரீட்சை நிலையங்களை குழப்புகின்ற வகையிலேயே எந்தவிதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. அதே நேரம் பரீட்சை நடைபெறுவதாக கூறப்படும் பகுதியிலிருந்து கணிசமான இடைவெளியிலேயே இளையோரைச் சந்தித்து உரையாடினோம்.

ஒருவேளை, எமதுசந்திப்பு தவறானதாக இருந்திருந்தால், பொலிஸார் அவ்விடத்திற்கு வருகை தந்து, சட்ட ரீதியாகத் தம்மை அடையாளப்படுத்தி எமது சந்திப்பு அவ்விடத்தில் நடத்துவது தவறானது, அங்கிருந்து அகன்று செல்லுமாறு கோரியிருக்கலாம். ஆனால், அவ்விதமான செயற்பாடுகளோ, முறைமைகளோ பின்பற்றப்படவில்லை. மாறாக, சிவில் உடையில் புலனாய்வாளர்களே அங்கு கூடியிருந்தார்கள். புகைப்படங்களையும், காணொளிகளையும்எடுத்தார்கள்.

அப்போதே நாம் அவர்களின் அடையாளத்தினைக் கோரினோம். அவர்கள்தர்க்கம் செய்துதாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடினார்கள் - என்றார்.

## 8 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார்.

இது குறித்து வன்னி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலி-ஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த 24 வயதான இளம் பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணிடம் நடத்திய விசாரணைகளை அடுத்து அவர் கொள்வனவு செய்திருந்த இரண்டு தங்க வலயல்கள், தங்கச்சங்கிலி, இரண்டு தங்க மோதிரங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். பொலிஸார் நேற்று அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர். (100)

## இன்று முதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கணித்திருந்த எரிபொருள் விநியோகஸ்தர்கள்; இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ஓ.சி. நிறுவனங்களிடம் எரிபொருள் கொள்வனவில் ஈடுபடாமல் இருந்தமையே நாட்டில்எரிபொருள்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது.

தற்போது எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்யும்வகையில்நிவாரணங்களை அரசாங்கம் வழங்குமென உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் பலனாக எரிபொருள் விநியோகஸ்தர்கள்இலங்கைபெற்றோலிய கூட்டுத்தாபனத்திமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த எரிபொருள் விநியோகத்துக்காக 350 கொள்கலன்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் 125 கொள்கலன்கள் விநியோகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆகவே நாட்டில் அநேகமான பகுதிகளில்ஏற்பட்டிருந்த எரிபொருள்தட்டுபாட்டுக்கான சூழல் குறைவடையுமென நம்புகிறோம். கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட பிரதான நகரங்களுக்கு எரிபொருள் விநியோகம் விரைந்து முன்னெடுக்கப்படுகின்றது - என்றார்.

## போதுமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தினங்களாக இருக்கின்ற போதிலும், நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில், ஒரு இலட்சம் மெற்றிக் தொன் டீசலும் 50,000 மெற்றிக் தொன் பெற்றோல் கையிருப்பில் உள்ளன.

ஆகவே கப்பல்கள் நாட்டைவந்தவுடன்எவ்விதமான தடைகளுமின்றி முழு நாட்டிற்கும் விநியோகத்தினைச்செய்ய முடியும்என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622









காலைக்கதிர்
Kalaikkathir



## யாழ். விமான நிலையத்தில் இருந்து வாரத்தின் ஏழு நாள்களும் சேவை

வாரத்தின் ஏழு நாள்களும் யாழ். விமான நிலையத்தில் இருந்து சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்தை விஸ்தரிப்பதற்கான கடன் வசதியை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடன் உதவி கிடைக்கப்பெற்றதும் விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (05)

## கனடாவில் கல்விபயிலும் வெளிநாட்டு மாணவரை இலக்குவைத்து மோசடி

கனடாவில் கல்விபயிலும் வெளிநாட்டு மாணவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் தொலைபேசி மூலமான மோசடிச்சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன எனத் தெரிவித்துள்ள கனேடிய அரசாங்கம்இ தொலைபேசி வாயிலாக தாம் எந்தவொரு கட்டணத்தையும் கோருவதில்லை என்றும்இ எனவே இத்தகைய மோசடிகள் தொடர்பாக எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேசநாடுகளைச்சேர்ந்த மாணவர்கள்பலர் கனடாவில் கல்விபயின்று வருவதுடன்இ குறிப்பாக பெருமளவான இலங்கையர்கள் கனடாவில் உயர்கல்வி பயில்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்டவாறான எச்சரிக்கை அறிவிப்பொன்றை வெளியிட்டிருக்கும் கனேடிய அரசாங்கம்இ இவ்வாறான மோசடிகள் இடம்பெறும் முறைகள் மற்றும் அவற்றிலிருந்து தற்காத்துக்கொள்ளக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் அதன் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் விரிவாக விளக்கமளித்துள்ளது.

குறிப்பாக கனடாவுக்கான வீசா அல்லது கனடாவில் வேலைவாய்ப்பு குறித்த உத்தரவாதத்தை எந்தவொரு நபராலும் வழங்கமுடியாது என்றும்இ கனேடியத்தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகரகங்களில் பணியாற்றும் குடிவரவு அதிகாரிகளால் மாத்திரமே வீசா விவகாரம் தொடர்பாகத் தீர்மானிக்கமுடியும் என்றும் அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று இச்சேவைகளுக்கான கட்டணங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள கனேடிய அரசாங்கம்இ தமது ஊழியர்கள் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் பணத்தை வைப்புச்செய்யுமாறு அல்லது தனிப்பட்ட பணப்பரிமாற்ற சேவையின் ஊடாகப் பணத்தை வைப்புச்செய்யுமாறு கோரமாட்டார்கள் என்றும் கனடாவுக்கு குடிபெயர விரும்புவோருக்கு விசேட சலுகைகள் எதனையும் வழங்கமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (05)

# கடன் பெறுவதைத் தவிர வேறு எந்த திட்டமும் ஜனாதிபதியிடம் கிடையாது

**குணபால ரத்னசேகர சாட்டை**



பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு கடன் பெறுவதை தவிர வேறு எந்த திட்டமும் ஜனாதிபதியிடம் கிடையாது. அதிக கடன் சுமையால் தான் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

கடன் மறுசீரமைப்பு 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வரை தற்காலிக தீர்வை மாத்திரம் வழங்கும் என சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற பிரதிநிதி குணபால ரத்னசேகர தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அதிக கடன்சுமையால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. கடன் பெற்றுபொருளாதாரப்பாதிப்பில்இருந்து மீள முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார். பொருளாதாரப் பாதிப்புக்கு கடன் பிரதான காரணியாக காணப்படும் நிலையில் கடன் பெற்று எவ்வாறு பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வது.

கடன்களை மறுசீரமைப்பதைத் தவிர்த்து அரசாங்கத்திடம் மாற்றுத் திட்டம் ஏதும் கிடையாது. கடன் பெறல், மறுசீரமைத்தல் ஆகிய தீர்மானங்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வரை சாத்தியமாக அமையும். கடன் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் வட்டியுடன் கடன்களை மீள செலுத்த வேண்டும்.

தேசிய கடன்களை மறுசீரமைப்பதால் சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். வங்கி கட்டமைப்பில் பாதிப்பில் ஏற்படும் பாதிப்பின் உண்மைத் தன்மையை அரசாங்கம் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நலன்புரி கொடுப்பனவுத் திட்டங்களை வெளிப்படைத் தன்மையுடன் விரிவுபடுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். ஆனால் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகிறதா என்பது கேள்விக்குறியான நிலையில் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை மாத்திரம் அரசாங்கம் முன்னெடுக்கிறது.

அரசாங்கத்தின் தீர்மானங்களால் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மாத்திரமே பயனடைந்துள்ளார்கள். நாட்டு மக்கள் இன்றும் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீளவில்லை. - என்றார். (05)






காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அபாய எச்சரிக்கை

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் வியாழக்கிழமை நடைபெற்ற 2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையில் குறிப்பிடப்பட்டஇரண்டு விடயங்கள் மிகவும் கரிசனைக்குரியன. அது நாட்டின் எதிர்கால அரசியல் போக்குக் குறித்த சமிக்ஞையாகவும் இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

கடந்த 10 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் நிலையைக் கொண்டிருந்தது இலங்கை. அதனைக்கடந்து வந்துள்ளோம். எவ்வாறாயினும்தற்போது சட்டம் ஒழுங்கு , அரசியல் பொருளாதார உறுதிப்பாடு உருவாகியுள்ளது. இந்த நிலைத் தன்மை குறுகிய காலத்திற்குரியது என்பதால்நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

சட்டம் ஒழுங்கு , அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து நாடு முழுமையாக மீண்டுவிட்டதெனக் கூறமுடியாது. தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர்.

நாடாளுமன்றம், நீதிமன்றம், ஊடகம், தனியார் துறை,தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், நமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரச நிர்வாக கட்டமைப்பு மீதான நம்பிக்கை முற்றாக இழந்துள்ளனர்.

நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50% பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியமென – என்று அரசுத் தலைவர் தெரிவித்தார்

அவர் தெரிவித்தவற்றில் முதலாவது, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளுக்கு பெரும்பான்மைப் பலம் இல்லை, அவர்கள் எல்லோரும் சேர்ந்து நின்றாலும்கூட அரைவாசி ஆதரவைக் கூடப் அவர்களால் திரட்ட முடியாது, எனவே நாட்டை மீட்டெடுக்க ஒத்துழைக்கவேண்டும். அதாவது ஆட்சியைக் கலைக்கின்றேன், நெருக்கடி கொடுக்கின்றேன் என்று காலத்தை வீணடிக்காமல் வந்து இந்த ஆட்சியுடன் சேர்ந்துகொள்ளுங்கள் என்கிற மறைமுக அழைப்பு அது.

நிலமை அப்படி இருப்பதால், அதாவது எதிர்க் கட்சிகள் பலமாக இல்லை என்பதால் இப்போதைக்குத் தேர்தல் இல்லை என்கிற மறைமுக அறிவிப்பாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம். குறைந்தபட்சம் அடுத்த வருடக் கடைசி வரைக்கும்கூட தேர்தல் இருக்காது. ஒருவேளை அதன் பின்னரும் தேர்தல் அன்றி ஒரு கருத்துக் கணிப்பை மட்டும் மேற்கொண்டுவிட்டு தான் பதவியில் நீடிக்கும் வழிவகைகளை ரணில் நாடவும்கூடும்.

அவர் கூறியிருக்கும் இரண்டாவது விடயமும் பாரதூரமானது. சட்டம் மற்றும்ஒழுங்கு, அரசியல்மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதால் நெருக்கடியிலிருந்து இலங்கை முற்றாக மீண்டுவிட்டது என்று கருத முடியாது. இந்தச் செயன்முறையின் வெற்றிக்கு எதிர்காலத்தில் பெரும் அர்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறியிருக்கிறார்.

இப்படி மக்கள் அர்ப்பணிப்பை மேற்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் என்று கடந்த காலங்களில் பேசிப் பேசியே வரலாற்றில் இல்லாதபடிக்கு மின்சசாரக் கட்டணத்தை உயர்த்தியாகிவிட்டது. கிட்டத்தட்ட எல்லோருக்கும் வருமான வரி விதிக்கப்பட்டாயிற்று. அரச வேலை வாய்ப்பு நிறுத்தப்பட்டுவிட்டது, சம்பள அதிகரிப்புக்கள் நிறுத்தப்பட்டுவிட்டது, பொருட்களின் விலைகள் எக்கச்சக்கத்துக்கு அதிகரிக்கப்பட்டுவிட்டன.

இவற்றைவிடவும் இன்னும் அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும் என்று அரசுத் தலைவர் தெரிவித்திருப்பதன் மூலம் இன்னும் என்னென்னவற்றையெல்லாம் மக்கள் அனுபவிக்கவேண்டிவரப்போகிறதோ......... தெரியவில்லை.

## காணாமல்போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்ய எதிர்பார்ப்பு

### நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



காணாமல் போனோர் தொடர்பாக ஆராயும்காரியாலயத்துக்கு இதுவரை 21 ஆயிரத்து 374 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 3 ஆயிரத்து 170 முறைப்பாடுகள் தொடர்பாக பூரண விசாரணை நடத்தி முடித்துள்ளோம்.

எஞ்சிய முறைப்பாடுகள்தொடர்பான விசாரணைகளை அடுத்த வருடம் இறுதிக்குள் முடிப்பதற்கு எதிர்பார்க்கிறோம் எனநீதி அமைச்சர் விஜயதாஸராஜபக்ஷ தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை ஆராயும் அலுவலகத்தின் முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பிரகாரம் யுத்தம் காரணமாக மரணித்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களுக்காக சான்றிதழ் விநியோகிக்கிறோம்.

பாதிக்கப்பட்ட சொத்துக்கள்தொடர்பாக ஆராய இழப்பீட்டு காரியாலயம் ஆரம்பித்தோம். இனங்களுக்கிடையிலான ஐக்கியம் நல்லிணக்கத்தை மேலும் விருத்தி செய்வதை நோக்காகக்கொண்டு தேசிய ஐக்கியம் மற்றும் இனநல்லிணக்கத்துக்கான காரியாலயம் ஆரம்பித்தோம்.

இந்த காரியாலயத்தின் கீழ் கிராமங்களில் ஐக்கியம் மற்றும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக கிராம மட்டத்தில் அமைக்கப்படுகின்ற நல்லிணக்க குழுக்களை அமைக்க ஆரம்பித்திருக்கிறோம்.

கிராம மட்டத்தில் அமைக்கப்படும் இந்த நல்லிணக்க குழுக்கள் ஊடாக கிராமங்களின் சமாதானம் இஐக்கியத்தை ஏற்படுத்தி இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். இந்த குழுக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் வேலைத்திட்டம் ஒன்றை அமைத்திருக்கிறோம்.

மேலும் வடமாகாண மக்களுக்கு ஆவணங்கள் தொடர்பாக இடம்பெற்று வந்த சட்டப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அந்த மாகாணத்துக்குள் 4 நடமாடும் சேவைகளை முன்னெடுத்தோம். இதன்போது யுத்தத்துக்கு பின்னர் இந்தியாவில் இருந்து சுமார் 12 ஆயிரம் பேர் வரை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கு வந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருந்தன. குறிப்பாக காணிகளுக்கு உரித்து இல்லை. பிறப்புச் சான்றிதழ் இல்லை. தேசிய அடையாள அட்டை இல்லை, குறிப்பாக இலங்கையராக வாழ்வதற்கான எந்த ஆவணமும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது. அதனால் அந்த மாகாண மக்கள் எதிர்கொண்டுவந்த பிரச்சினைகளில் நூற்றுக்கு 90வீத தீர்வை பெற்றுக்கொடுத்தோம்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்துக்கு பிறகுசுமார் 35வருடகாலத்துக்குபின்னர் நாங்கள் கடந்த வாரம் கிழக்கு மாகாண மக்களுக்காக விசேட நடமாடும் சேவை ஒன்றைமேற்கொண்டோம். அதன் ஊடாக ஆயிரம் பேர் வரையான மக்களுக்கு இருந்துவந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தோம். ஒரு சிலருக்கு பல வருடகாலமாக இருந்துவந்த காணிப்பிரச்சினைக்கு தீரவு பெற்றுக்கொடுத்தோம்.

மேலும் 2016 இல் காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டாலும்அதன் முன்னேற்ற அறிக்கை தொடர்பாகத் திருப்தியடைய முடியாமல் இருந்தது.

அதனால் அதன் நடவடிக்கைகளை முறையாக செயற்திறமையாக்கி இருக்கிறோம். காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராயும்அலுவலகத்துக்கு இதுவரை காணாமல் போனவர்கள் தொடர்பில் 21 ஆயிரத்து 374 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

அதில் 6 ஆயிரத்து 386 முறைப்பாடுகள் முப்படைகளின் உறுப்பினர்கள் தொடர்பானவை என்பதுடன் ஏனைய 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் இதுவரை 3 ஆயிரத்து 170 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை முடிவடைந்திருக்கின்றன. ஏஞ்சிய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அடுத்த வருடம் நிறைவடைவதற்குள் முடிப்பதற்கே நாங்கள் முயற்சிக்கிறோம். (05)

## வினைத்திறனான சேவை வழங்கும் குடிவரவு குடியகல்வு திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவை வினைத்திறனாக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் சேவை ஊடாக இரண்டு மணித்தியாலங்களுக்குள் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும்.

கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக குறுக்கு வழி, இடைத்தரகர்களை நாடுவதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

திணைக்களத்துடன் நேரடியாக தொடர்புகொண்டு சிரமங்கள் இல்லாமல் சிறந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டு பணிப்பாளர் ஹர்ஷ இலுக்பிடிய தெரிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

கடந்த ஆண்டு வெளிநாட்டு கடவுச்சீட்டு பெறுகைக்கு அதிக கேள்வி காணப்பட்டதால் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காக நேரம்இ திகதி ஆகியவற்றை ஒதுக்கிக் கொள்வதற்காக நிகழ்நிலை முறைமையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

நிகழ்நிலை முறைமையின் கீழ் ஒருநாள் சேவை மற்றும் சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கு ஒருவர் குறைந்தபட்சம் மூன்று மாதகாலம் காத்திருக்கவேண்டியதன்மைகாணப்பட்டதால் நிகழ்நிலை முறைமையின் கீழ் நேரம் மற்றும் திகதி ஒதுக்கிக் கொள்வது தொடர்பில் எதிர்மறையான கருத்துக்கள் குறிப்பிடப்பட்டன.

இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்கான விண்ணப்பம் கோரலுக்கான கேள்வி குறைவடைந்த காரணத்தால் நிகழ்நிலை முறைமையின் ஊடாக நேரம் மற்றும் திகதி ஒதுக்கிக் கொள்ளும் முறைமை கடந்த மாதம் (மே) 17 ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகம் குறித்து புதிய வழிமுறையை பின்பற்றுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்ததை தொடர்ந்து கடவுச்சீட்டு விநியோகத்தை வினைத்திறனான முறையில் முன்னெடுக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இதற்கமைய வெளிநாட்டு கடவுச் சீட்டு விநியோகத்துக்கான பணிகள் காலை 07 மணிமுதல் ஆரம்பமாகும். டோக்கன் முறையில் பொதுமக்கள் திணைக்கள வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவார் கள்.விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் முறையாக சமர்பிக்கப்பட்டவுடன் டோக்கன் அடிப்படையில் விண்ணப்பதாரி அழைக்கப்படுவார்.

ஒருநாள் சேவை ஊடாக கடவுச் சீட்டை பெற்றுக்கொள்ளும் வகையில் ஆவணங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு 2 மணித்தியாலங்களுக்குள் வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும். முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் போது எவ்வித அசௌகரியங்களுமின்றிய வகையில் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும். ஆகவே விண்ணப்பங்கள் ஆவணங்கள் தொடர்பில் பொதுமக்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

பிரதேச சபை ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும் புதிய செயற்திட்டம் எதிர்வரும் இருவார காலத்துக்குள் செயற்படுத்தப்படும்.

இந்த சேவை ஊடாக துரிதரக கடவுச்சீட்டு சேவையை 3 நாள்களுக்குள் சாதாரன சேவையை 14 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.


பதிவு தபால் ஊடாக வீட்டுக்கு வெளிநாட்டு கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.அத்துடன் வெளிநாட்டு கடவுச்சீட்டின் பெறுமதிஇஅதனை பாவிக்கும் முறைமை தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் அறிவுறுத்தல அட்டைஒன்றுகடவுச்சீட்டுடன்இணைத்து அனுப்பி வைக்கப்படும்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் கடவுச்சீட்டு தொடர்பான பணிகளை இலங்கையின் குடியரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்புகொண்டு நிகழ்நிலை முறைமை ஊடாக மேற்கொள்ளும் தொழில் நுட்ப வசதி எதிர்வரும் மாதம் அறிமுகப் படுத்தப்படும்.

வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகம் தற்போது வினைத்திறனான முறையில் முன்னெடுக்கப்படுகிறது. நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய தேவை இல்லை. கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் குறுக்கு வழிகளையும் இடைத்தரகர்களையும் நாட வேண்டிய தேவை கிடையாது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் நடவடிக்கைகள் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளால் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.ஆகவே பொதுமக்கள் திணைக்களத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். - என்றார். (05)

## 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்காம்' தமிழ் தலைமைகளுக்கு டக்ளஸ் அட்வைஸ்!



தமிழ் அரசியல் தரப்புக்கள் தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப் படுத்தி அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அடம் பன் கொடியும் திரண்டால் மிடுக்கு எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தால் கடற்றொழிலாளர்களுக்காக நன்கொடையாக பெற்றுக் கொண்ட மண்ணெண்ணையை பூநகரி கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம்ஊடகவியலாளர்கள்கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்இ தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்களின் நலனுக்காக இந்திய தூதுவரை சந்திப்பதற்கான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பது அவர்களின் சயநல அரசியலை வெளிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்ட விரோத தொழில் முறைகளையும் அத்துமீறல்களையும் கட்டுப்படுத்துவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தியத் தூதுவரை சந்திப்பதற்குத் தயாராக இருப்பதாகஇ கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மறுதினம் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றியிருந்தமை தொடர்பாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சமூகப் போராட்டம் தோல்வியடையும்போது மதப்போராட்டத்துக்கு சிலர் தயாராகின்றனர்

## அமைச்சர் பிரசன்ன சாட்டை



சமூகப்போராட்டம்தோல்வியடையும் போது அதன் பின்னணியில் உள்ள குழுக்கள் மதப்போராட்டத்துக்குத் தயாராகும். அதுவும்தோல்வியுற்றால்நாட்டில்இனவாதத்தை விதைப்பார்கள் என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும்இ நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டை அராஜகம் செய்யும் இவ்வாறான குழுக்களுக்கு எதிராக யார் மூக்கை நுழைத்தாலும் பொருட்படுத்தாது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெறுப்புப் பேச்சுக்களை பரப்பி மக்களை அடைத்து வைக்கும் நபர்களுக்கும் குழுக்களுக்கும் எதிராக மக்கள் கிராம மட்டத்தில் நிற்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் ஆணைக்குழுவிற்கு வருகை தந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி உடுகம்பொலவில் உள்ள தனது வீட்டை போராட்டக்காரர்கள் சேதப்படுத்தியமை தொடர்பில் அமைச்சர் இதற்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

கேள்வி: நீங்கள் இதற்கு முன்னரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வந்திருக்கிறீர்கள். இன்று ஏன் வந்தீர்கள்?

E-tron battery systems under construction in Brussels - Credit: Audi

The most important question is whether customers will respond to vehicles like the e-tron. "I think we did all that we can. We made the first car, and I think for the first car, it's very, very good," says Niemand.

Pressed on whether consumers are ready to adopt electric vehicles en masse, Niemand thinks back to his first experience with the R8 e-tron, an electric version of the Audi 2-seat sports car that has been tested in various forms since at least 2010. Before driving the car, a professional driver warned the executive that it would be much faster than he expected. Niemand said he thought the driver was joking. "Then I pushed the throttle, and ... I knew, forget about everything else."

His experience left him in no doubt: "This is the future."

OKAYA
ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

# இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2023இல் வெளியிடப்பெற்றது.

## நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 18 சனிக்கிழமை 03.06.2023 கதிர் 75


## லிட்ரோ எரிவாயு விலை 300 ரூபாவால் குறைப்பு



நாளை நள்ளிரவு முதல் 12.5கிலோகிராம்எடைகொண்ட லிட்ரோ வீட்டு சமையல் எரிவாயு கொள்கலனின் விலை குறைக்கப்படவுள்ளது என்று லிட்ரோநிறுவனத்தின்தலைவர் முதித்தபீரிஸ்அறிவித்துள்ளார்.

இதன்படி,குறித்தசமையல் எரிவாயு கொள்கலனின் விலை, 300 ரூபாவுக்கும் அதிக தொகையில், குறைக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விலை குறைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் நாளை விடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (02)

## அரசியல் களத்தில் இறங்கார் ஜலனி!

### சஜித் உறுதி



தமது குடும்பத்தில் உள்ள எவரையும் அரசியல் களத்தில் இறக்கப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனது மனைவி ஜலனி பிரேமதாஸ அரசியலுக்கு வருவதற்குத் தயாராகி வருகின்றார் என வெளியாகும் தகவலையும் எதிர்க்கட்சித் தலைவர் மறுத்துள்ளார்.

எப்போதும்அவர்சமூகஆர்வலராகவே செயற்படுவார். நாட்டு மக்களின் நலனுக்காக எனது மனைவி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். நானோ, எனது மனைவியோ குடும்ப அரசியலில் ஈடுபடவில்லை. – என்றும் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளார். (02)

# 3 ரயில்கள் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் 261 பேர் இந்தியாவில் சாவு

### மேலும் 900 பேர் படுகாயம்



**இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள பாலசோரில் வெள்ளிக்கிழமை மாலை மூன்று தொடருந்துகள் ஒன்றோடொன்று மோதி ஏற்பட்ட விபத்தில் 261 பேர் உயிரிழந்தனர். 900க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.**

**இரண்டு பயணிகள் தொடருந்துகளும் ஒரு சரக்குத் தொடருந்தும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. பெங்களூரு – ஹவுரா சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ், ஷாலிமார் – சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் மற்றும் சரக்குத் தொடருந்து ஆகிய மூன்றுமே மோதின.**

☞ 2

## சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது சட்டத்தரணி சிறீகாந்தார அறிக்கை

நேற்று வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் மருதங்கேணியில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மீது பொலிஸார் சிலரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும், அவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலும், வடக்கில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன எவ்வளவு தூரம் சீர்குலைந்துள்ளன என்பதற்கு மிக அப்பட்டமான எடுத்துக்காட்டு ஆகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.சிறீகாந்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாக்குதல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் வாக்குவாதம் மட்டுமே நிகழ்ந்தது என்றும், பொலிஸ் துறையின் ஊடகப் பேச்சாளர் கூறியிருப்பது நிகழ்த்தப்பட்ட அடாவடித்தனத்தை மூடி மறைக்கும்

☞ 2

## பருத்தித்துறையில் வாள்வெட்டு

யாழ்., பருத்தித்துறையில் இளைஞன்ஒருவர்வீடொன்றுக்குஅருகில்இருந்து சடலமாக மீட்கப்பட்ட நிலையில் வீட்டின் உரிமையாளர் மீது இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பருத்தித்துறை, மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் (வயது 50) என்பவர் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை, இரண்டாம் குறுக் குத் தெருவைச் சேர்ந்த தியாகராசா சந்திரதாஸ் (வயது 33) எனும் இளைஞர்

☞ 2

## நீரில் மூழ்கி சிப்பாய் உள்ளிட்ட 2 பேர் சாவு

வெவ்வேறு இடங்களில் நீரில் மூழ்கி இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மஹாவெல – ரஜ்ஜம்மத பிரதேசத்தில் உள்ள சுது கங்கையில் நீராடச் சென்றவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி மீட்கப்பட்ட நிலையில் நாலந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பாமுல்ல – கிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தாம் பணியாற்றிய இராணுவ முகாமின் அதிகாரிகள் குழுவுடன் மஹாவெல பகுதிக்குச் சென்ற போது அனர்த்தத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

இதேவேளை, கல்கிரியாகம – உஸ்ஸான பாலத்துக்கு அருகில் உள்ள ஹவன்வெல்ல ஓயாவில் நீராடச் சென்றவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் கலேவெல

☞ 2

## விக்னேஸ்வரனும் கண்டனம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது மருதங்கேணியில் நடத்தப்பட்ட தாக்குதல் கடுமையாகக் கண்டிக்கவேண்டியது என்று தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒருநாடாளுமன்றஉறுப்பினரை இப்படி நடத்திய படையினர் தண்டனையில் இருந்து

☞ 2

## வவுனியா சிறையிலிருந்து 5 கைதிகள் இன்று விடுவிப்பு



பொசன் போயா தினத்தினை முன்னிட்டு வவு னியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 5 கைதிகள் பொது மன்னிப்பின் கீழ் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

பொசன் போயா தினத்தையொட்டி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து சிறுகுற்றங்களை புரிந்த மற்றும் தண்டப்பணத்தினை செலுத்த முடியாத 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் சிறைக்கைதிகளை சந்திப்பதற்கும் அவர்களது உறவினர்களுக்கு இன்று விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதலை ரணில் வேடிக்கை பார்க்கக்கூடாது

### வடக்கு மாகாண அவைத் தலைவர் வலியுறுத்து

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்ற சம்பவங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேடிக்கை பார்த்துக்கொண்டிராமல் தடுக்க முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே..சிவஞானம்.

நாடாளுமன்ற உறுப்பினர் மீதான கொலைமுயற்சியையும் அவர் மீதான தாக்குதலையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் சந்திப்பில் அவர் ஈடுபட்டிருந்த போது அங்கு புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அவர் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச் சம்பவதை நாம் இலங்கை அரசின் ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றோம்.

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் இவற்றைத் தடுக்க முன்வர வேண்டும். இவ்வாறு தமிழர் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் அரச புலனாய்வாளர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதலானது ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் விடுக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம்.

– இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (03)

## நல்லாட்சியில் அரச பங்காளியாக மனோ அணி சாதித்தவை எவை?

### அவரே சொல்கிறார் விவரங்களை



2015 இல் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி முதன் முறையாக ஆட்சியில் பங்காளியாகச் செயற்பட்ட நான்கே (2015 – 2019) வருடங்களில் ஏற்படுத்திய சாதனைகளும், அடித்தளங்களும், எமது தொடர்சியான அரசியல் பயணமும் என்ற தலைப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் முகநூலில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

01. நுவரெலிய மாவட்டத்தில் மேலதிக புதிய ஆறு பிரதேச சபைகள் அமைக்கும் தீர்மானம், அரசுக்குள் நடைபெற்ற பெரும் வாத விவாதங்களுக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய பிரதேச சபைகள் அமைக்கப்பட்டு, மலையகத் தமிழ் மக்களுக்கான தேசிய அரசியல் அதிகாரம் பகிர்வுப் பயணம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

02. தேசிய அரசியல் அதிகாரம் பகிர்வுக்குச் சமமாக, தேசிய நிர்வாக அதி கார பரவலாக்கல் கொள்கையின்படி, புதிய பிரதேச செயலகங்களும், கிராம சேவையாளர் பிரிவுகளும் அமைக்கும் தீர்மானம் கொள்கை ரீதியாக ஏற்கப்பட்டு, பிரதேச செயலகங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

☞ 2

## மக்களில் பெரும்பாலானோருக்கு தேர்தல் மீது நம்பிக்கை இல்லை!

### பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதே தற்போதைய தேவை என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டு



நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50 வீத பலத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கச் சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தற்போதும்இந்நாட்டுமக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நடைபெற்ற 2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதால் நெருக்கடியிலிருந்து இலங்கை முற்றாக மீண்டுவிட்டது என்று கருத முடியாது என்று வலியுறுத்திய ஜனாதிபதி இந்தச் செயன்முறையின் வெற்றிக்கு எதிர்காலத்தில் பாரிய அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்தார்.

☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## மக்களில் பெரும்பாலானோருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்தபத்துமாதங்களுக்குமுன்பாக இலங்கை முன்னொருபோதும் காணாத பொருளாதார நெருக்கடியைக் கண்டது என்று தெரிவித்த ஜனாதிபதி, அந்த நெருக்கடியிலிருந்த மீண்டு வருவதற்கான முயற்சிகளைத் தாம் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்திருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

தேசிய சட்ட மாநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றி ஆராயப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அதற்காக நுவரெலியா தெரிவு செய்யப்பட்மையும் பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

கோப்பி நடுகை மற்றும் பெருந்தோட்ட பொருளாதாரத்தை ஆரம்பித்து வைத்தவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த ஆளுநர் எட்வட் பான்ஸுக்கும் நுவரெலியாவில் வீடொன்று காணப்பட்டது.

கடந்த 10 – 11 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் வகையிலான நிலைமைகளைக் கடந்து வந்துள்ளோம். எவ்வாறாயினும் தற்போது சட்டம் – ஒழுங்கு, அரசியல் – பொருளாதார ஸ்திரத்தன்மையும் உருவாகியுள்ளது. இந்த நிலைத்தன்மை குறுகிய காலத்துக்குரியது என்பதால் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாகக் கண்டிருந்தது. இருப்பினும் சட்டம் – ஒழுங்கு, அரசியல் – பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டது என்று கூற முடியாது.

தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர்.

நாடாளுமன்றம், நீதிமன் றம், ஊடகம், தனியார் துறை, தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், நமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரச நிர்வாகக் கட்டமைப்பு மீதான நம்பிக்கை முற்றாக இழந்துள்ளனர். – என்றார். (02)

## நல்லாட்சியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
03. தோட்டங்களில் ஏழு பேர்ச் சொந்த காணி வழங்கலுக்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

04. நீண்ட காலமாக நின்று போயிருந்த, இந்திய அரசின் பெருந்தோட்ட வீடமைப்பு உதவி திட்டம், இலங்கை – இந்திய அரசுகளின் ஒப்புதலுடன், நடைமுறைக்கு வந்தது.

05. தோட்டத் தொழிலாளருக்கான சொந்த உறுதி பத்திரம் கொண்ட தனி வீடுகள் கட்டப்படும் திட்டம் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது.

06. அவ்விதம், கட்டப்படும் குடியிருப்புகள் மலையகத்தில் புதிய கிராமங்களாக அறிவிக்கப்பட்டு, மலைநாட்டில் தமிழ் கிராமங்கள் என்ற புதிய காற்று வீச தொடங்கியது.

07. மலையக மக்களால் வாக்களித்துத் தெரிவு செய்யப்படும் பிரதேச சபைகளுக்கு, தம்மைத் தெரிவு செய்யும் தோட்ட புறங்களுக்கு, அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்ற பிரதேச சபை அதிகார எல்லை சட்டத்தின் 33 ஆம் இலக்க விதி, திருத்தப்பட்டு, பிரதேச சபைகளின் அதிகார வரம்பு, தோட்டபுறங்களுக்கு அதிகாரபூர்வமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

08. மலையக அபிவிருத்திக்கான தனியான அதிகார சபை அமைக்கும் அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு, இன்று சட்டமாகி, பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை அமைக்கப்பட்டுள்ளது.

09. சுமார் 300 தோட்டப்புற பாடசாலைகளுக்கு, அவ்வவ் தோட்டங்களில் அவசியப்படும் போது, மேலதிக காணிகளைச் சுவீகரிக்கும் அதிகாரத்தைக் கல்வித் துறைக்கு வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தது.

10, மலையக மக்களுக்கு, தேசிய அரசமைப்புப் பணியில், ஏனைய இனங்களுக்கு வழங்கப்படும் அதே சம அந்தஸ்தும், காத்திரமான சம பங்கும் வழங்கப்பட்டன.

11. மலையக மக்கள் தனி ஒரு தேசிய இனம் என்ற அரசியல் கருத்து இன்று தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

12. பெருந்தோட்ட மறுசீரமைப்பு இலக்கில், தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்தைக் கூட்டும் வெளிப்பயிர்ச்செய்கை வருமானத் திட்டம் சீரமைக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர்களை, சிறுநில உடைமையாளர்களாக (மலையக விவசாயி) ஆக்கும் திட்டம் பற்றிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அது, தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கு கொண்டு ஆதரித்த, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டது. இது இப்போது சாதகமான எதிர்காலப் பயன்பாட்டுக்கான ஆவணம்.

13. மலையகப் பல்கலைக் கழகம் அமைப்பது தொடர்பில், மலையக சான்றோர் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டதுடன், அக்குழு கூடி ஆராய்ந்து, பல்கலைக்கழகம் தொடர்பான சாத்தியப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. – என்றுள்ளது. (02)

## விக்னேஸ்வர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தப்புகிறார்கள் என்றால், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் சிங்களப் பொலிஸாரின் உதவியுடன் படையினரின் சப்பாத் துக் கால்களால் எப்படி நசுக்கப்பட்டிருப்பார்கள் என்பதை இந்த உலகம் உணர வேண்டும்.

இந்தச் சம்பவம் குறித்து ஆட்சியாளர்கள் உடனடியாக விசாரணை நடத்தவேண்டும். தவறிழைத்தவர்கள் தாமதமின்றித் தண்டிக்கப்படவேண்டும். தண்டிப்பதற்குத் தாமதமோ தயக்கமோ காட்டப்படின் தவறிழைத்தவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் அது தைரியத்தைத் தரும் – என்றுள்ளது.

## நீரில் மூழ்கி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று கல்கிரியாகம பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் 37 வயதுடைய உஸ்ஸான, தேவஹூய பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

சடலம் கலேவெல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (02)

## பருத்தித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த 28ஆம் திகதி அவரது வீட்டுக்கு அருகில் உள்ள மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள சுகுமார் என்பவரின் வீட்டுக்கு வெளியே அதிகாலை வேளை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தநிலையில் சுகுமாரின் வீட்டினுள், அத்துமீறி நுழைந்த மூவர் கொண்ட குழு சுகுமார் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

உயிரிழந்த இளைஞர் இரவு நேரம் எதற்காக அந்த வீட்டுக்கு அருகில் சென்றார் என்பது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், இளைஞரின் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளமை பொலிஸாருக்குப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (02)

## சட்டம் ஒழுங்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முயற்சியாகும்.

இச்சம்பவம், அமைதியை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியில் மிகக் கடுமையான உணர்வலைகளை ஏற்படுத்தி நிற்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு, அடாவடித்தனத்தில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர்கள் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை உடனடியாகவும் விரைவாகவும் நடத்தி, உரிய நடவடிக்கைகளை சட்டத்தின் பிரகாரம் எடுக்க முன்வரவேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில், வடக்கு கிழக்கு, மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நீதி நிலை நாட்டப்படுவதற்கு ஏதுவாகச் சாத்தியமான சகல வழிகளிலும் அரசியல் அழுத்தத்தை பிரயோகிக்க முன்வரவேண்டும் என்று வேண்டகோள் விடுக்கின்றோம் – என்றுள்ளது.

## 3 ரயில்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோரமண்டல் எக்ஸ்பிரஸ் தொடருந்தும் சரக்குத் தொடருந்தும் நேருக்கு நேர் மோதியதில் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் தொடருந்து தடம் புரண்டது. தண்டவாளத்தைவிட்டு விலகித் தெறித்த பெட்டிகள் எதிர்ப்புறத்தில் இருந்த தண்டவாளத்திலும் வீழ்ந்தன. சிறிது நேரத்தில் எதிர்ப் பாதையில் வந்த மற் றைய பயணிகள் தொடருந்து அந்தப் பெட்டிகளில் மோதி விபத்துக்குள்ளானது.

சமீபத்திய அறிக்கையை மேற்கோள் காட்டி, ஒடிசா தலைமைச் செயலாளர், இறப்பு எண்ணிக்கை 261 என்று தெரிவித்தார்,

மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன, அருகிலுள்ள மாவட்டங்களில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் முழுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 4 ஒடிசா பேரிடர் விரைவு நடவடிக்கைப் பிரிவுகள், 15 க்கும் மேற்பட்ட தீயணைப்பு மீட்புக் குழுக்கள், 30 மருத்துவர்கள், 200 காவல்துறை பணியாளர்கள் மற்றும் 60 ஆம்புலன்ஸ்கள் சம்பவ இடத்தில் அணிதிரட்டப்பட்டுள்ளன என்று ஒடிசா தலைமைச் செயலாளர் பிரதீப் தெரிவித்தார்.

இந்த பயங்கர ரயில் விபத்தைக் கண்டித்து முதல்வர் நவீன் பட்நாயக் ஒருநாள் அரசு துக்கம் அறிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விபத் தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



# டெங்கைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் திருகோணமலையில் ஆலோசனை கூட்டம்

## ஆளுநர் செந்தில் தலைமையில்






(ஹுஸ்பர்)

திருகோணமலை, ஜுன் 03

கிழக்கு மாகாணத்தில் டெங்கை கட்டுப்படுத்துவது தொடர்பிலான ஆலோசனை கூட்டம் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை மாகாண சபை கட்டடத்தில் இடம்பெற்றது.

இதில் டெங்கு பரவும் வலயங்களாகக் காணப்படும் பிரதேசங்களில் புதிய திட்டங்களை கையாளுவதன் மூலமாகஅதில்இருந்துபாதுகாத்து குறைக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆளுனர் உயரதிகாரியிடத்தில் பணிப்புரை விடுத்தார்.

இதில் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். (05)

# பலருக்கு பாதிப்பை ஏற்படுத்திய கண்சொட்டு மருந்து தொடர்பாக இந்திய மருந்துதர அமைப்பு விசாரணை!

இலங்கையில் 30 பேருக்கு கண் பாதிப்பை ஏற்படுத்திய கண்சொட்டு மருந்துதொடர்பாக இந்தியாவின்மருந்து தரகட்டுப்பாட்டு அமைப்பு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குஜராத்தை சேர்ந்த இன்டியானா ஒப்தல்மிக்ஸ் நிறுவனத்தின் மருந்து குறித்தே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

ஏப்ரல் மாதம் இலங்கையின் அரச வைத்தியசாலைகளில் இந்த மருந்தை பயன்படுத்தியதால் பலரின் கண் பார்வை பாதிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கையின் சுகாதார அமைச்சு இந்த மருந்தை மீளப்பெற்றிருந்தது.

இந்த கண்மருந்தில் என்ற வகை பக்டீரியா காணப்பட்டதாக சண்டே கார்டியன் செய்திவெளியிட்டிருந்தது.

குறிப்பிட்ட நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு வழங்கவேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்திய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என இலங்கை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என நியுஸ் 18 செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து இலங்கை இறக்குமதி செய்த கண்சொட்டு மருந்துகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என எங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது சில நோயாளிகளிற்கு பக்டீரியா பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18 இற்கு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 35 இற்கும் அதிகம் என எங்களுக்கு தெரிவித்துள்ளனர். இலங்கை அமைச்சரவையிலும் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18 இற்குத் தெரிவித்திருந்தார்.

அரச வைத்தியசாலை அதிகாரிகள் அந்த மருந்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் முடிவிற்காக காத்திருக்கின்றனர் என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த கண்சொட்டு மருந்தை மலட்டுத்தன்மை குறித்த சோதனைக்கு உட்படுத்தவேண்டியுள்ளதால் முடிவுகள் வெளியாக மேலும் 15 நாள்கள் தேவைப்படும் எனவும் இந்திய அதிகாரியொருவர் நியுஸ் 18 இற்குத் தெரிவித்துள்ளார். (05)





# ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு

(சண்முகம் தவசீலன்)

வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.

பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நவதள இராஜகோபுரப் பணிகள் மற்றும் ஆலய புணரமைப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு ஆலயத்துக்கும் நவதள இராஜகோபுத்துக்கும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.

கடந்த 26.05.23 அன்று கிரியைகள் ஆரம்பமாகி சிவாச்சாரியார்களால் விசேட யாகபூசைகள் நடத்தப்பட்டு 29,30,31 ஆம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது மூன்று நாள்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து எண்ணைய்க்காப்பு சாத்தினர்.

இதனைத் தொடர்ந்து 01.06.2023 அன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் சுயம்பு லிங்கத்துக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட நவதள ராஜகோபுரத்துக்கும் 11.10 மணிதொடக்கம் 12 மணிவரையுள்ள சிம்மலக்கன சுபநேரத்தில் சிவாச்சாரியார்களின் மந்திர பாராயணங்களுடன் மகா கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் வருகைதந்து கும்பாபிகேப் பெருவிழாவை கண்டு எம்பெருமானின் ஆசியையும் பெற்றுச்சென்றுள்ளார்கள். (05)

# ஹபாணந்துறையில் இளைஞரை துரத்தி வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் பாடசாலை மாணவன் கைது!

பாணந்துறையில் உள்ள ஆடை தொழிற்சாலையொன்றுக்கு முன்பாக 23 வயதுடைய இளைஞர் ஒருவரை கொலை செய்த சந்தேகத்தின் பேரில் பாடசாலை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மாணவன் கொலையை செய்த பிரதான சந்தேக நபருக்கு உதவுவதற்காக அவருடன் ஓட்டோவில் வந்துள்ளமை விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை வெகட பிரதேசத்தில் கடந்த மே 31ஆம் திகதி இரவு இளைஞரொருவர் கொல்லப்பட்டார்.

பாணந்துறையில் உள்ள ஆடை தொழிற்சாலைக்கு முன்பாக குறித்த இளைஞர் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் ஆடை தொழிற்சாலை வளாகத்துக்குள் ஓடியுள்ளார்.

அவரைப் பின்தொடர்ந்த கொலையாளி, ஆடை தொழிற்சாலை வளாகத்துக்குள் நுழைந்து, அந்த இளைஞரை வாளால் தாக்கிய விதமும் சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளது.

மேபதரவில அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரு குழுக்களுக்கிடையில் நீண்ட காலமாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், கொலையைச்செய்த சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வன்னிவிளாங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான வன்னிவிளாங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) மிக சிறப்பாக இடம்பெற்றது.

நண்பகல் கொடியேற்றப்பட்டு விசேட அபிஷேகங்கள் இடம்பெற்று பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இதனை தொடர்ந்து இரவு பாரம்பரிய முறைப்படி மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு விசேட பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றது.

இதேவேளை காலை முதல் ஆலயத்துக்கு அதிகளவான பக்தர்கள் வருகை தந்து காவடி, பால்செம்பு, கற்பூரசட்டி உள்ளிட்ட தமது நேர்த் திக் கடன்களை நிறைவேற்றிவருகின்றனர். (05)

# காத்தான்குடியில் பலாப்பழ வியாபாரி போர்வையில் ஹெரோயின் விற்ற இருவர் உள்ளிட்ட 3 பேர் கைது

காத்தான்குடியில் ஹெரோயின்போதைப்பொருடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்தார்.

பிரதான வீதியில் பலாப்பழம் விற்பனை செய்யும் இருவர்மற்றும்புதியகாத்தான்குடி நூறாணியா பிரதேசத்தில் வைத்து மற்றொருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரிடமுமிருந்து சுமார் 280மில்லிகிராம்ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கைது செயப்பட்டுள்ள நபர்களும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களும் மட்டக்களப்பு நீதிவான்நீதிமன்றத்தீதில்ஆஜர் படுத்தப்படவுள்ளனர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# இளம்பெண் மீது கணவர் தாக்குதல்

## பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

கிளிநொச்சி கோனாவில் பகுதியில் கணவனால் தாக்கப்பட்டு படுகாமடைந்த இளம் குடும்பப் பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிகோணாவில்மத்தியில்கடந்தசெவ்வாய்க்கிழமை இரவு இரண்டு பிள்ளைகளின் தாயான இளம் குடும்ப பெண் அவரது கணவரால் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டு இரண்டு கண்கள் மற்றும் தலைப்பகுதியில் பல காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்ஶ்ரீக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் வியாழக்கிழமை மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அவரது புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வந்துள்ளது. இதனையடுத்தே இது பற்றி பலரும் ஆராய முயன்றுள்ளனர்.

மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வுகளையும் அல்லது வன்முறைகளை ஏற்படுத்துவர்களை தண்டிப்பதற்கு அரச உயர் அதிகாரிகள் முதல் பொலிஸாரோ முன் வருவதில்லை. குற்றச் செயல்களில் ஈடுபடுவர்கள் பாதுகாக்கப்படுவதாகவே பலரும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இவ்வாறு குற்றவாளிகள் பாதுகாக்கப்படுவதாலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (05)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக குரல் கொடுப்போம் தொனிப்பொருளில் பேரணியும் விழிப்புணர்வுக் கூட்டமும்





சிறுவர் தினத்தை முன்னிட்டு, சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரல் கொடுப்போம் என்னும் தொனிப் பொருளில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியும் விழிப்புணர்வு கூட்டமும் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகின.

இந்த நிகழ்வு சங்கானை கலாசார மண்டபத்தில் இருந்து ஆரம்பமாகி, பேரணியாக சங்கானை பஸ் நிலையத்தை வந்தடைந்தது. பின்னர் சங்கானையில் பிரமாண்டமான முறையில் விழிப்புணர்வுக் கூட்டம் இடம்பெற்றது.

மங்கலவிளக்கேற்றலுடன்நிகழ்வு ஆரம்பமானது. மாணவர்களின் வரவேற்புநடனம், அதனையடுத்து விருந்தினர்களின் உரை, மாணவர்களது பேச்சு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெற்றன.

சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனவிரத்ன ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டமையுடன், வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் ரவீந்திரன், உலக தரிசனம் நிறுவனத்தின் கள முகாமையாளர் பாக்கியநாதன் ரொஹாஸ், சங்கானை பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி வை.யதுனந்தன், வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் பாலரூபன், வட்டுக்கோட்டை, மானிப்பாய், இளவாலை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## விசாரணையின் அவசியம்

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்து கடும் கண்டனங்கள் வெளிப்பட்டு வருகின்றன. அந்தத் தாக்குதலில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். எனினும் சம்பவம் இடம்பெற்று 24 மணி நேரத்திற்கும் அதிகமாகிவிட்டபோதும் அது தொடர்பில் அரசுத் தலைவரோ ஆளும் தரப்பின் ஏனைய ஆட்சிய–ளர்களோ கவனம் செலுத்தியதாகவோ கருத்துத் தெரிவித்ததாகவோ இல்லை. காவல்துறையினர் தரப்பில் வாக்குவாதம் இடம்பெற்றது, ஆனால் தாக்குதல் நடத்தப்படவில்லை என்கிற சமாளிப்பு முன்வைக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மருதங்கேணியில் மக்கள் சந்திப்புக்காகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் அவரது சந்திப்புக்களையும் அலைபேசிகளில் காணொலி எடுத்த இருவரையும் யார் என்று விசாரிக்கச் சென்ற இடத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பின்னர் நாடாளுமன்ற உறுப்பினரை நோக்கி துப்பாக்கியை நீட்டுமளவிற்கு நீண்டது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரச்சினையில் தலையிட்ட காவல்துறையைச் சேர்ந்த இருவர் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான காவல் நிலையத்தில் இருந்து வந்த அதிகாரி ஒருவர் இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துவிடலாம் என்றும் தெரிவித்தார் என்றும் அதே தரப்பினர் கூறுகின்றனர்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றவர்களும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடக்கும் பாடசாலை வளாகத்திற்குள் நின்றார்கள், அவர்களை வெளியேறும்படி காவல் அலுவலர்கள் தெரிவித்ததை அடுத்து கருத்து முரண்பாடு ஏற்பட்டது என்ற வகையிலும் கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிய முடிகின்றது. ஒருவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அப்படியே பரீட்சை நடைபெறும் பாடசாலை வளாகத்திற்குள் நின்றிருந்தாலும் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கூறுவதற்கான நியாயமான வழிமுறைகள் உள்ளன. அதனைவிடுத்து அவர்களை மிரட்டும் வகையில் நடந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

மக்கள் பிரதிநிதியை அச்சுறுத்துவது, அவருடன் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வது, அப்படி நடந்துகொண்டவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தவிர்ப்பது ஆகியவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அது குறித்து பக்கச் சார்பற்ற நீதியான விசாரணை நடத்தப்படுவது மிக அவசியம். அதன் மூலமே உண்மை வெளிவரும் என்பதுடன், உண்மையான குற்றவாளிக்கும் தண்டனை கிடைக்கும். எனவே இது விடயத்தில் அனைவரும் ஒன்றுபட்டு நின்று, நீதியை நிலைநாட்டப்போராடுவது அவசியம்.

# புதிய நாடாளுமன்ற செயலாளர் நாயக நியமனம் இளைஞர்களுக்கு உத்வேகம்!

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பாராட்டு



நாடாளுமன்றத்தின் புதிய செயலாளர் நாயகமாக குஷானி ரோஹணதீர நியமிக்கப்பட்டுள்ளமை இளைஞர்யுவதிகளுக்கு உத்வேகம் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட விரும்புவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள குஷானி ரோஹணதீரவை சந்தித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் புதிய நியமனம் தொடர்பில் வாழ்த்து தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும்இ அமெரிக்கத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்துடன் தொடர்ந்து ஒத்துழைப்புடன் பணியாற்ற தாம் விரும்புவதாகவும் நாடாளுமன்றத்தை பலப்படுத்துவதற்கு எப்பொழுதும் தமது ஒத்துழைப்பை எதிர்பார்க்கலாம் எனவும் தூதுவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தின் வகிபாகம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் பல்வேறு குழுக்கள் செயற்படுவதாகவும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர சுட்டிக்காட்டினார்.

ஆட்சிமுறையில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் பாலின சமத்துவம் மற்றும் வலுப்படுத்தல் தொடர்பான சட்டமூலம் மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவை அமைப்பதற்கான பிரேரணை என்பன சம்பந்தப்பட்ட தரப்புடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வருவதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ரோஹண தீரவின் இந்த நியமனம் பல்வேறு இளைஞர் யுவதிகளுக்கு உத்வேகம் அளிப்பதாக அமைந்துள்ளது என்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். ஒருவருக்கொருவர் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதன் முக்கியத்துவம் மற்றும் சாத்தியமான ஒத்துழைப்புக்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. (05)

# பொசனை முன்னிட்டு வவுனியாவில் பொலிஸார் பல இடங்களில் தானம்









பௌத்த சமயமானது இலங்கை கொண்டு வரப்பட்ட பொசன் தினத்தை முன்னிட்டு வவுனியா பொலிஸாரால் பல்வேறு இடங்களில் மக்களுக்கு இன்று தானம் வழங்கினர்.

பிரதான தானம் வழங்கும் நிகழ்வை வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன்பாக ஏ9 வீதியில் வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது மக்களின் தாகத்தை தீர்க்க பானம் தானம் வழங்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் களஞ்சியசாலை முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் வீதியால் சென்ற மக்களுக்கு மரவள்ளிக்கிழங்கு தானமாக வழங்கப்பட்டது. தொடர்ந்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் முன்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் 2000 பேருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் மதத் தலைவர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (100)

# நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தையில் போலி ஆவணங்கள் தயாரிப்பிடம் முற்றுகை

நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தை பகுதியில் போலி ஆவணம் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடத்திச் சென்றதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜகிரிய பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணிகள் மற்றும் சமாதான நீதிவான்களின் உத்தியோகபூர்வ முத்திரைகள், 3 போலி அடையாள அட்டைகள், சேவை அடையாள அட்டை, இரண்டு கணனிகள் மற்றும் போலியான ஆவணங்களை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட இரண்டு அச்சிடும் கருவிகள், 260 வெவ்வேறு உத்தியோகபூர்வ முத்திரைகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பெலேவத்தை மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் வெள்ளிக்கிழமை அளுத்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கொரோனா பாதுகாப்பு உடைகள்,

# சுகாதார உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் பாணந்துறையில் பாரிய தீ!

பாணந்துறை கிரிபெரியவில் இரண்டு மாடிக் கட்டடத்தில் உள்ள களஞ்சியசாலையில் கொரோனா பாதுகாப்பு உடைகள் உள்ளிட்ட சுகாதார உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஹிரண பொலிஸார் தெரிவித்தனர். குறித்த களஞ்சியசாலையில் சுமார் 7 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தபாரியதீயைஅணைப்பதற்கு ஹொரணை, களுத்துறை, மொரட்டுவவை மற்றும் தெஹிவளை மாநகர சபைகளின் தீயணைப்பு பிரிவுகள் அழைக்கப்பட்டன.

தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வாகனங்கள் உட்பட 11 தண்ணீர் பவுஸர்களுடன் 30 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

கொரோனா உடைகள், முகமூடிகள், சத்திரசிகிச்சையின் போது அணியும் ஆடைகள் உள்ளிட்ட பல சுகாதார உபகரணங்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)